**கவனிக்க.-** 26.07.2024 ஆந் திகதிய 2395 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வரத்தமானியின் பகுதி IV (அ) (தமிழ் மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2396 - 2024 අගෝස්තු මස 02 වැනි සිකුරාදා - 2024.08.02

2396 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 732 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 735 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, ஓகத்து மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஓகத்து மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## மண்முனை மேற்கு பிரதேச சபை, வவுணதீவு

*மண்முனைப்பற்று மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பிரதேசங்களை அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களாக பிரகடனப்படுத்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பயனைக் கொண்டு மண்முனை மேற்கு பிரதேச சபையினால் 2024 ஆம் ஆண்டின் மாச்சு மாதம் 22 ஆந் திகதிய பொதுக் கூட்டத்தில், தீர்மான இலக்கம் 2024/03/22/98/11 இன் கீழ் சபையினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு குறித்த சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரிவினால் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் மட்டக்களப்பு நிர்வாக மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சின்னராசா பிரகாஸ் ஆகிய நான், அங்கீகாரம் வழங்குவதனை இத்தால் பொது மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

சின்னராசா பிரகாஸ்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
மட்டக்களப்பு நிர்வாக மாவட்டம்.

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் அடிப்படையில் மண்முனை மேற்கு பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், அவ்வாறு ஏற்றுக் கொள்ளும் பிரேரணையினை சட்ட ரீதியாக நிறைவேற்றுவதற்கு மட்டக்களப்பு நிர்வாக மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டு செயற்பட வேண்டுமென்று மண்முனை மேற்கு பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

| வட்டாரங்களின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு இலக்கம் |
|---|---|---|
| கரையாக்கன்தீவு | இலுப்படிச்சேனை | 148 |
| காந்திநகர் | பாவற்கொடிச்சேனை | 148A |
| உன்னிச்சை | பன்சேனை | 148B |
| காந்திநகர் | காந்திநகர் | 148C |
| காஞ்சிரங்குடா | காஞ்சிரங்குடா | 148D |
| கரையாக்கனதீவு | கொத்தியாபுலை | 148E |
| கன்னன்குடா | குறிஞ்முனை | 149B |
| | பருத்திச்சேனை | 149D |
| கரையாக்கன்தீவு | புதுமண்டபத்தடி | 149E |
| வவுணதீவு | மங்கிகட்டு | 182C |
| மகிழவட்டவான் | மகிழவட்டவான் | 184 |
| உன்னிச்சை | உன்னிச்சை | 184A |
| ஆயித்தியமலை | ஆயித்தியமலை வடக்கு | 184B |
| | ஆயித்தியமலை தெற்கு | 184C |
| மகிழவட்டவான் | நரிப்புல் தோட்டம் | 184D |
| காந்திநகர் | நெடியமடு | 184E |

**ஊவாபரணகம பிரதேச சபை**

வளர்ச்சியடைந்த பிரதேசமாக பிரகடனம் செய்தல் - 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 வது பிரிவின் (1) வது உபப்பிரிவில் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், அச்சட்டத்தின் 9 வது பிரிவின் (3) உபபிரிவில் சபை செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் ஊவாபரணகம பிரதேச சபை செயலாளரினால் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி இலக்கம் 2024/03/27-319 இன் கீழ் கொன்டுவரப்பட்டுள்ள பின்வரும் தீர்மானத்திற்கு, அச்சட்டத்தின் 134 வது பிரிவின் (1) வது உபப்பிரிவில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் பதுளை மாவட்ட, உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஈ.ஜீ.ஜே.பீ. ஆரியரத்ன எனும் நான், ஒப்புதல் வழங்கியுள்ளதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர்
பதுளை மாவட்டம்,

உதவி உள்ளூராட்சி ஆணையாளர் காரியாலயம்,
ஊவாபரணகம,
2024, யூலை 19.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டவாக்கின் 134 வது பிரிவின் (1) வது உப்பிரிவில் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், ஊவாபரணகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்படும் பிரதேசத்தை வளர்ச்சியடைந்த பிரதேசமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அத்தீர்மானத்திற்கு பதுளை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் ஒப்புதலை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் தீர்மானிக்கின்றேன்."

**அட்டவணை**

இலக்கம் 41 B லுனுவத்த (ஒரு பகுதி) கிராம உத்தியோகத்தர் பிரிவு, இலக்கம் 41 C உனபன (ஒரு பகுதி) கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ளடங்கிய ஊவாபரணகம பிரதேச சபையின் அதிகார வரம்பில் அமைந்துள்ள,


**வடக்கில்**: ஏரிக்கரையின் வடக்கு விளிம்பில் வெகும்புர ஏரியின் மதகுக்கு மேற்கே 246 மீற்றர் தொலைவில் தொடக்கப் புள்ளியில் இருந்து தொடங்கி, மீண்டும் அதே ஏரிக்கரை வழியாக கிழக்கு திசையில் மதகு வரை மற்றும் அங்கிருந்து வடகிழக்கு திசையில் நீர்ப்பாசன கால்வாய் மையக் கோடு வழியாக ஹல் ஓயாவின் மையக் கோட்டைச் சந்திக்கும் கோடு வரை, அங்கிருந்து தென்கிழக்கு திசையிலும், மீண்டும் வடகிழக்கு திசையிலும் ஹல் ஓயாவின் மையக் கோட்டுடன் ஹல்ஓயா மதகு வரை, அங்கிருந்து 402 மீற்றர் தொலைவில் கிழக்கு நோக்கிய மான கால்வாயின் மையக் கோட்டுடன் லியாங்கஹவெல நீர்க்ககரை முறையின் மையப் புள்ளியை சந்திக்கும் இடத்திற்கு வரையப்பட்ட கோடு,

**கிழக்கில்**: தென்மேற்கு நோக்கி மான கால்வாயின் மைய கோட்டுடன் கடைசியாகக் குறிப்பிடப்பட்ட இறங்கு புள்ளியிலிருந்து வெலிமடை - கம்பஹா பிரதான வீதியின் மையக் கோடு மான கால்வாயின் மையக் கோட்டைச் சந்திக்கும் இடம் வரை, அங்கிருந்து நீர்க்கரை முறையின் மையப் புள்ளிக்கு 743 மீற்றர் தூரத்திற்கு கிழக்கு மற்றும் தெற்கே நோக்கி மான கால்வாயின் மையக் கோட்டுடன் வரையப்பட்ட கோட்டுடன்,

**தெற்கில்**: கடைசியாக்க குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து தென்மேற்கு நோக்கிய மான கால்வாயின் மையக் கோடு வழியாக லுனுவத்த - உனபன வீதியின் மையக் கோட்டைச் சந்திக்கும் இடம் வரை, அங்கிருந்து அரசாங்கத்தின் ஒதுக்கப்பட்ட காணியின் வடக்கு எல்லையிலும், மான கால்வாயின் மையக் கோடு வழியாக மேற்கு நோக்கி புல்வெளியின் கிழக்கு எல்லையை சந்திக்கும் இடம், அங்கிருந்து மேற்கு நோக்கி 1360 மீட்டர் தூரத்திற்கு புல்வெளியின் மேற்கு எல்லையை சந்திக்கும் இடத்திற்கு வரையப்பட்ட ஒரு கோட்டுடன்,

**மேற்கில்**: கடைசி குறிப்பு புள்ளியில் இருந்து வடமேற்காக வரையப்பட்ட 265 மீற்றர் நேர் கோடு தொலைவில் வெலிமடை-கம்பஹா பிரதான வீதியில் 1/10 வடிகாலின் நடுப்பகுதியை சந்திக்கும் இடம் வரை. மேலே உள்ள ஏரியின் மேற்கு விளிம்பில் மேலும் வடக்கே தொடக்கப் புள்ளியை சந்திக்கும் வரை வரையப்பட்ட கோடு.
எல்லையிலுள்ள,

*நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வரையப்பட்ட பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நகர அபிவிருத்தி சபை அதிகார வரம்பு.*




*08- 22*

---

**இப்பாகமுவை பிரதேச சபை**

*மதிப்பீட்டு வரி பாக்கியை செலுத்தாததன் காரணமாக பறிமுதல் செய்யப்பட்ட சொத்தை பொது ஏலத்தில் விற்பனை செய்தல் - 2024*

*இப்பாகமுவை பிரதேச சபை எல்லைக்குள் உட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள மதிப்பிடக்கூடிய சொத்து அலகுகள் தொடர்பாக வருடாந்த மதிப்பீட்டு வரியை செலுத்தாமை மற்றும் மதிப்பீட்டு வரி நிலுவைகள் காரணமாக பறிமுதல் செய்யப்பட்ட 03சாய்மாண பிரம்புக் கதிரைகள் 26:08.2024 ஆந் திகதியன்று காலை 10:00 மணிக்கு பொது ஏலத்தில் விற்பணை செய்யப்படும் என்பதை இப்பாகமுவை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் இதனை பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றது.*

*எச். எம். நிரோஷா ஹேரத்,*
*செயலாளர்,*
*பிரதேச சபை,*
*இப்பாகமுவை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*இப்பாகமுவை,*
*2024, யூலை 30.*

*08-84*

# நானாவித அறிவித்தல்கள்

**தீயணைப்பு இயந்திரங்கள் மற்றும் அதிகாரிகளை கடமைகளுக்குப் புறம்பாக வேறு இதர சிறப்புப் பணிகளுக்கு வழங்குவதற்கான வரி விதிப்பு தொடர்பான முன்மொழிவுகள்**

*தீயணைப்பு சேவைகள் திணைக்களத்தினால் மாத்தறை மா நகர சபை எல்லைக்கு வெளியே (அரச சொத்துக்கள் தவிர்த்து) தீயணைப்பு சேவைத் துறை மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிற சேவைகளை கோரும் போது, கீழ்க்கண்டவாறு கட்டணம் வசூலிப்பது பொருத்தமானது என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்.*

*நகராட்சி அதிகார வரம்பிற்குள் அவசர தீ ஏற்பட்டால், சேவை இலவசமாக வழங்கப்படுகிறது.*

*இந்த சேவை இருபத்தி நான்கு மணி நேரமும் தொடர்ந்து செயல்படுகிறது.*

I. *சிறப்பு தீ பாதுகாப்பு கடமை ( சனாதிபதி /பிரதமர் தவிர)*
II. *ஊர்வலம் தீ பாதுகாப்பு அதிகாரி*
III. *தனியார் ஹோட்டல் இசை நிகழ்ச்சி பாதுகாப்பு கடமைகள்*
IV. *இசை வீடியோக்களை படமாக்குதல் மற்றும் தீயணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்துதல்.*
V. *தனியார் மற்றும் அரச நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளுக்கு தீயணைப்பு வாகனங்கள் மற்றும் அலுவலர்களை அனுப்புதல்*
VI. *தனியார் மற்றும் அரசு நிறுவனங்களால் நடத்தப்படும் கண்காட்சிகள் மற்றும் நிகழ்வுகளுக்கு தீயணைப்பு வாகனங்கள் மற்றும் அதிகாரிகளை அனுப்புதல்*

*மேலே குறித்த தீயணைப்பு சந்தர்ப்பங்களுக்கு பின்வரும் கட்டணங்கள் பொருத்தமானது என கருத்துத்தெரிவித்துள்ளோம்.*

***தீயணைப்பு சேவைகளுக்கு வசூலிக்கப்படும் கட்டணங்கள்***

*நகர சபை எல்லைக்குள் அவசர தீ விபத்து ஏற்பட்டால் கட்டணங்கள் அறவிடப்படாது தீயணைப்புச் சேவை இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த சேவை ஒரு நாளைக்கு இருபத்தி நான்கு மணி நேரமும் தொடர்ந்து செயல்படுகிறது.*

*நகர எல்லைக்கு வெளியே உள்ள இடங்களுக்கு, கட்டணம் பின்வருமாறு வசூலிக்கப்படுகிறது.*

| | |
|---|---|
| • *தீயணைப்பு இயந்திரத்திற்கான அடிப்படைக் கட்டணம்* | *ரூபா15000.00* |
| • *தண்ணீர் பவுசருக்கு* | *ரூபா 5000.00* |
| • RIV *மற்றும் கப் வண்டிக்கு* | *ரூபா 5000.00* |
| • *தீயணைப்பு இயந்திரம் புறப்பட்ட முதல் ஒரு மணி நேரத்திற்கு* | *ரூபா 2000.00* |
| • *மேலதிக ஒரு மணி நேரத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு* | *ரூபா 1000.00* |
| • *தீயணைப்பு இயந்திரத்திற்கு போக்குவரத்து கட்டணம் ஒரு கிலோமீட்டர் (செல்வதற்கும் வருவதற்கும்)* | *ரூபா 200.00* |
| • *ஒரு லீட்டர் தண்ணீருக்கு தண்ணீர் கட்டணம்* | *ரூபா 200.00* |
| • *நீர் பவுசர் போக்குவரத்து கட்டணம் ஒரு கிலோமீட்டர் ( செல்வதற்கும் வருவதற்கும் )* | *ரூபா 200.00* |
| • *நிலைய பொறுப்பு அதிகாரிக்கு ஒரு மணி நேரத்திற்கு* | *ரூபா 500.00* |
| • *அடிப்படை தீயணைப்பு படையினருக்கு ஒரு மணிநேரத்திற்கு* | *ரூபா 400.00* |
| • *முதல் வகுப்பு இயந்திரவியலாளருக்கு ஒரு மணி நேரத்திற்கு* | *ரூபா 300.00* |
| • *தீயணைப்பு படையினருக்கு ஒரு மணி நேரத்திற்கு* | *ரூபா 300.00* |
| • *தீயணைப்பு வாகன சாரதிக்கு ஒரு மணி நேரத்திற்கு* | *ரூபா 150.00* |
| • *லொரி அல்லது பவுசர் சாரதிக்கு ஒரு மணி நேரத்திற்கு* | *ரூபா 100.00* |
| • *தீயணைப்பு அலகில் சேவை புரியும் மேலதிக ஊழியருக்கு ஒரு மணி நேரத்திற்கு* | *ரூபா 750.00* |
| • *தீ விபத்தின்போது அழைக்கப்படும் கட்டுப்பாட்டு அறை இயக்குனருக்கு ஒரு மணி நேரத்திற்கு* | *ரூபா 750.00* |

**முதன்மை தீ அணைக்கும் கருவிகளை தீயணைக்க பயன்படுத்த வேண்டி ஏற்பட்டால், உபகரணங்களுக்கு கட்டணம் வசூலித்தல்.**

- தீயணைப்பு இயந்திரங்கள் அணுக முடியாத சந்தர்ப்பங்களில் கிணறு அல்லது நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் எடுப்பதற்கான பம்புகள் மற்றும் உபகரணங்களின் தேய்மானக் கட்டணங்கள். ரூபா 1000.00

- முதன்மை தீ அணைக்கும் கருவிகளுக்கான கட்டணம் அறவிடல் (தற்போதைய வர்த்தக சந்தை பெறுமதியின் படி தீர்மானிக்கப்படும்)

- நகர எல்லைக்கு வெளியே 20 கி.மீ. வரம்பிற்கு ( மாத்தறை நகராட்சியிலிருந்து ) தீ அணைப்புக் கட்டணம் (நிலையான) வீடுகளுக்கு ரூபா. 7500.00

நகர எல்லைக்கு வெளியே உள்ள அரசு நிறுவனங்களுக்கு தீயை அணைக்கும் பணிகளுக்கு கட்டணம் அறவிடப்படுவதில்லை.

**மாத்தறை மாநகர தீயணைப்புத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தீ பாதுகாப்பு ஆலோசனை பரிந்துரைகள் மற்றும் சான்றிதழ்களுக்கான கட்டணங்கள் அறவிடல்**

**தீ பாதுகாப்பு பரிந்துரை கட்டணங்கள் ( நகர எல்லைக்கு வெளியே)**

| சதுர மீற்றர் அளவு ($m^2$) | தீ பாதுகாப்பு நிருவனக் கட்டணம் (50343-1) (ரூபா) | ஆய்வுக் கட்டணம் (50343-1) (ரூபா) | VAT (15%) (ரூபா) | மொத்தத் (ரூபா) |
|---|---|---|---|---|
| 300 $m^2$ வரை 1 | 3000.00 | 3000.00 | 450.00 | 3450.00 |
| 301 $m^2$ - 500 $m^1$ வரை 1 | 4500.00 | 3000.00 | 675.00 | 5175.00 |
| 501 $m^2$ - 750 $m^1$ வரை 1 | 10000.00 | 3000.00 | 1500.00 | 11500.00 |
| 751 $m^2$ - 1000 $m^1$ வரை 1 | 15000.00 | 3000.00 | 2250.00 | 17250.00 |
| 1001 $m^2$ - 1250 $m^1$ வரை 1 | 25000.00 | 3000.00 | 3750.00 | 28750.00 |
| 12501 $m^2$ க்கு மேல் | 35000.00 | 3000.00 | 5250.00 | 40250.00 |

**தீ பாதுகாப்பு பரிந்துரை கட்டணங்கள் (நகர எல்லைக்குள்)**

| சதுர மீற்றர் அளவு ($m^2$) | தீ பாதுகாப்பு நிருவனக் கட்டணம் (50343-1) | VAT (15%) (ரூபா) | மொத்தத் (ரூபா) |
|---|---|---|---|
| | (50343-1) (ரூபா) | | |
| 300 $m^2$ வரை 1 | 2500.00 | 375.00 | 2875.00 |
| 301 $m^2$ - 500 $m^1$ வரை 1 | 4000.00 | 600.00 | 4600.00 |
| 501 $m^2$ - 750 $m^1$ வரை 1 | 7000.00 | 1050.00 | 8050.00 |
| 751 $m^2$ - 1000 $m^1$ வரை 1 | 10000.00 | 1500.00 | 11500.00 |
| 1000 $m^2$ க்கு மேல் | 22000.00 | 3300.00 | 25300.00 |

இந்த அறவீடுகளைத் தவிர மேலதிக அரச வேறு வரிகளும் அறவிடப்படும்.

இந்த அறவீடுகளில் 35% கட்டணங்களை உத்தியோகத்தருக்கு செலுத்துவதோடு மீதமுல்ல தொகை 65% தொகை சபை நிதியத்திற்கு வரவு வைக்கப்படும்.

- ஆய்வுக் கட்டணம்

(இந்த ஆய்வுக் கட்டணத்திற்கு மற்றும் மேற்குறித்த 65% தொகைக்கு மற்றும் அரசு அனுமதிக்கப்பட்ட வரி அறவிடப்படும்.

| | |
|---|---|
| தீ தடுப்பு அதிகாரியின் போக்குவரத்து கட்டணமாக ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு ( வருவதற்கும், செல்வதற்கும்) | ரூபா 20.00 |
| காலி மாவட்டத்திற்குள் அதிகபட்சமாக | ரூபா 2000.00 |
| மாத்தறை மாவட்டத்திற்குள் அதிகபட்சமாக | ரூபா 1500.00 |
| ஹம்பாந்தோட்டை மாவட்டத்திற்குள் அதிகபட்சமாக | ரூபா 2500.00 |

**(தென் மாகாணத்திற்கு வெளியே செல்வதாயின் விஷேட அனுமதியைபெற்றுக் கொள்ளல் வேண்டும்)**

- சிபார்சினை பெற்றுக்கொடுக்கும் போது கட்டணத்தை அறவிட்டு மீண்டும் உத்தியோகத்தருக்கு செலுத்தும் போது மாதத்திற்கு அதிகபட்டசமாக ரூபா 25,000.00 ஆக இருத்தல் வேண்டும், மேலதிக பணம் ஏதாவது இருப்பதாயின் அது சபையின் நிதிக்கு வரவு வைக்கப்படும்.

மாத்தறை மாநகரசபை தீயணைக்கும் பிரிவினால் பெற்றுக் தரப்படும் பயிற்சிப் பாட நெறிகளுக்காக கட்டணம் அறவிடல்

| | | |
|---|---|---|
| I. | 01 நாள் (05 மணி) தீ அணைப்பு கோட்பாடுகள் உட்பட செயல்முறை பயிற்சி (தீ முக்கோணம், தீ வகுப்பு, தீயை அணைக்கும் தொழில்நுட்பங்கள், அடிப்படை தீயை அணைக்கும் கருவிகள், தீ நிவாரணம். | ரூபா 12000.00 |
| II. | 02 நாள் தீயை அணைக்கும் கொள்கைகளுடன் கூடிய நடைமுறை பயிற்சி, | |
| III. | (மீட்பு, அவசரகால வெளியேற்கும் தீர்வு முறை) | ரூபா 20000.00 |

Hose Reel System
Fire Hydrant System
Fire Alarm System
Pump Room
Control Room
Control Panel
Evacuation Drill

(தீ அணைப்பு இயந்திரத்தை பாவிப்பதாயின் அதற்கான கட்டணம் ரூபா 20,000.00)

பயிற்சிநெறிகளுக்காக அறவிடப்படும் கட்டணத்தில் 20% பணத் தொகை பயிற்சியளிக்கும் அதிகாரிகளுக்கு உரித்தாகும்.
20 % பணத் தொகையில் பிரதான அதிகாரிக்கு 12% மும் உதவி உத்தியோகத்தருக்கு 8% வழங்கப்படும்.

**மேற் குறித்த கட்டணங்களுக்கு அரச வரி அறவிடப்படல் வேண்டும்**

01. அதிகாரிகள் பயிற்சியளிக்கும் முயற்சிகளில் ஈடுபடல்.

- சம்பந்தப்பட்ட பணிகளுக்கு 02 அலுவலர்கள் உத்தியோகபூர்வ சீருடையில் பங்கு பற்றுதல் வேண்டும் மற்றும் இரண்டு அலுவலர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் ஒருவரால் சம்பந்தப்பட்ட பணிகளைச் செய்ய வேண்டும்.

- *சம்பந்தப்பட்ட பணிக்கு ஈடுபடும் அலுவலர்கள் தங்களது பணி மாறுதலுக்கு தொடர்பில்லாத நாட்களில் உரிய பணிகளில் உத்தியோக பூர்வ முறையில் பங்கேற்க வேண்டும் (நகர பொறியியலாளர் அனுமதி)*

- *சம்பந்தப்பட்ட பணிக்கு ஈடுபடும் அலுவலர்கள், நகரபொறியியலாளர் அவர்களிடமிருந்து பங்கு பற்றுவதற்கான எழுத்து மூல சிபாரிசினைபெற்றிருத்தல் வேண்டும்.*

- *சம்பந்தப்பட்ட பணிக்கு ஈடுபடும் அலுவலர்கள் உரிய நிருவனத்தினால் பயிற்சி நெறி தொடர்பாக கட்டணத்தை மாத்தறை மாநகர சபைக்கு செலுத்தப்பட்டுள்ளதா என்பதை உருதிசெய்துகொள்ளல் வெண்டும்.*

**02. பயிற்சியளிக்கும் பணிகளுக்கு தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் பொருட்கள்**

- *பயிற்சியளிக்கும் பணிகளுக்கு தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் பொருட்கள் உரிய நிருவனத்தினால் வழங்கப்படல் வேண்டியதோடு, நகரபொறியியளாளரின் ஒப்புதலின் கீழ் இது தொடர்பாக உரிய நிருவனத்திற்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.*

- *உரிய பயிற்சிப் பணி தொடர்பாக போக்குவரத்து வசதிகளை உரிய நிருவனத்தினால் எல்லா சந்தர்ப்பங்களிலும் வழங்குதல் வேண்டும்.*

**03. பயிற்சிச் சான்றிதழ் வழங்குதல்.**

- *ஏதாவது நிருவனத்தினால் பயிற்சிப் பாடநெறியினை வெற்றிகரமாக முடித்ததன் பின்னர் பயிற்சிச் சான்றிதழ் தேவைப்படுமாயின் அது தொடர்பாக நகர பொறியியளாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.*

- *அதன் படி பயிற்சிப் பாடநெறி தொடர்பாக பங்கு பற்றிய பிரதான பயிற்சியாளர், நிலைய பொருப்பாளர், மற்றும் நகரபொறியியலாளரின் ஒப்பத்துடன் தீ அணைப்பு பயிற்சிச் சான்றிதழ் ஒன்று வழங்க முடியும்.* (FIRE TRAINING CERTIFICATE)

- *தீ அணைப்பு பயிற்சிச் சான்றிதழின் செல்லுபடியாகும் காலம் பயிற்சிப் பாடநெறி நடத்தப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலம் வரையாகும்.*

*08-07*

---

**அலவ்வ பிரதேச சபை**

*ஏக்கர் வரி விதித்தல் - 2025*

*அலவ்வ பிரதேச சபையில் அதிகாரம் நடைமுறைப்படுத்துகின்ற, செயல்கள், கடமைகளை நிறைவேற்றுகின்ற, அலவ்வ பிரதேச சபையின் செயலாளர் எம். பி. சீ. ரேணுகா ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9.3 பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 134(3) பிரிவின் விதிகளுக்கமைய அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2025 ஆம் ஆண்டிற்கு ஏக்கர் வரி விதிப்பதற்கு உரிய சட்டம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும் என்று 2024.06.05 ஆந் திகதி 3324 ஆம் தீர்மான இலக்கத்தின் கீழ் நான் தீர்மானிக்கின்றேன்.*

*2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட ஏக்கர் வரி மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதிகளில் முடிவடைகின்ற காலாண்டுகளுக்கு முன் சமமான நான்கு பகுதிகளாக பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

2025 ஆம் ஆண்டிற்கான மொத்த ஏக்கர் வரி 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டால் அந்த மொத்த ஏக்கர் வரி அளவில் நூற்றுக்கு பத்து (10%) கழிவும், ஒவ்வொரு காலாண்டிற்கும் உரிய ஏக்கர் வரி அந்த ஒவ்வொரு காலாண்டில் முதலாம் மாதத்தில் இறுதி திகதிக்கு முன் பிரதேச சபைக்கு செலுத்தப்பட்டால் நூற்றிற்கு ஐந்து (5%) கழிவும் வழங்கப்படும்.

எம். பி. சீ. ரேணுகா,
செயலாளர்,
அலவ்வ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அலவ்வ,
2024, யூலை 01.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தில் 146 ஆம் உப பிரிவில் (1) ஆம் உப பிரிவினால் அலவ்வ பிரிதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி 2024 ஆம் ஆண்டு அதிகாரமாக்கப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு 2025 ஆம் ஆண்டிற்காக ஏற்றுக் கொள்வதற்கும்,

உரிய சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ளதும் மேற் கூறப்பட்ட சட்டத்தில் 135 ஆம் பிரிவின் கீழ் ஏக்கர் வரியில் இருந்து விடுவிக்காததும், நிரந்தரமாக அல்லது அன்றாடம் விவசாயம் செய்கின்றதும்,

(அ) ஹெக்டயார் ஐந்து அல்லது அதற்கு அதிகமான எல்லா காணிக்காகவும் அந்த காணியின் எல்லா ஹெக்டயாருக்காக 2025 ஆம் ஆண்டிற்காக பத்து ரூபா (ரூ.10.00) வண்ணம் வருடாந்தம் விதிக்கப்பட்டு அறவிடுவதற்கும்.

(ஆ) மேற்கூறப்பட்ட சட்டத்தின் 134 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவின் இடைநிலை சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்ற விடய பொறுப்புடைய கௌரவ அமைச்சரினால் அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவை விஷேட பிரிவாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (ஆ) ஆம் பகுதியின் 1989.03.10 ஆந் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதனால், ஹெக்டயார் ஒன்றிற்கு அதிக அதாவது ஹெக்டயார் ஐந்திற்கு குறைந்த எல்லா காணிகளுக்கும் 2025 ஆம் ஆண்டிற்காக ஐம்பது ரூபா (ரூ.50.00) வண்ணம் வருடாந்த ஏக்கர் வரி விதித்து அறவிடுவதற்கும், மற்றும்

(இ) பிரதேச சபை சட்டத்தின் 134 ஆம் பிரிவில் (6) ஆம் உப பிரிவின் சட்டத்திட்டத்தின் கீழ் உரிய வருடத்தில் மார்ச் 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதிளுக்கு முன் சமமான நான்கு பகுதிகளாக செலுத்துவதற்கு கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்று நான் பிரேரணை விடுக்கின்றேன்.

08-21/1

---

**அலவ்வ பிரதேச சபை**

மதிப்பீட்டு வரி விதித்தல் - 2025

அலவ்வ பிரதேச சபையில் அதிகாரம் நடைமுறைப்படுத்துகின்ற, செயல்கள், கடமைகளை நிறைவேற்றுகின்ற, அலவ்வ பிரதேச சபையின் செயலாளர் எம். பி. சீ. ரேணுகா ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9.3 பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 134(3) பிரிவின் விதிகளுக்கமைய அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2025 ஆம் ஆண்டிற்கு மதிப்பீட்டு வரி விதிப்பதற்கு உரிய சட்டம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும் என்று 2024.06.05 ஆந் திகதிய 3325 ஆம் தீர்மான இலக்கத்தின் கீழ் நான் தீர்மானிக்கின்றேன்.

*2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட மதிப்பீட்டு வரி மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதிகளில் முடிவடைகின்ற காலாண்டுகளுக்கு முன் சமமான நான்கு பகுதிகளாக பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*2025 ஆம் ஆண்டிற்கான மொத்த ஏக்கர் வரி 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டால் அந்த மொத்த மதிப்பீட்டு வரி அளவில் நூற்றுக்கு பத்து (10%) கழிவும், ஒவ்வொரு காலாண்டிற்கும் உரிய மதிப்பீட்டு வரி அந்த ஒவ்வொரு காலாண்டில் முதலாம் மாதத்தில் இறுதி திகதிக்கு முன் பிரதேச சபைக்கு செலுத்தப்பட்டால் நூற்றிற்கு ஐந்து (5%) கழிவும் வழங்கப்படும்.*

*எம். பி. சீ. ரேணுகா,*
*செயலாளர்,*
*அலவ்வ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*அலவ்வ,*
*2024, யூலை 01.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தில் 146 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் அலவ்வ பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப்படி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1659 ஆம் இலக்க 2010.06.18 ஆந் திகதியுடைய வர்த்தமானியின் கீழ் பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ள முன்னேற்றமடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதும் பிரதேசத்தினுள் அமைந்துள்ள எல்லா வீடுகளில், கட்டிடங்களில், காணிகளில் வீட்டுத் தோட்டங்களில் ஆண்டு பெறுமதியில் 2017 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட மதிப்பீட்டின் படி 2025 ஆம் ஆண்டு மதிப்பீடாக ஏற்றுக் கொள்வதற்கும்,*

*உரிய சட்டத்தின் 134(1) ஆம் உப பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி அந்த சொத்துக்களின் மீது மேற்கூறப்பட்ட மதிப்பீட்டிற்காக வருடாந்த பெறுமதியில் நூற்றிற்கு நான்கு வீதம் (4%) ஆண்டு மதிப்பீட்டு வரி தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும்,*

*அவ்வாறே ஆண்டு மதிப்பீட்டு வரி 2025 ஆம் ஆண்டில் சனவரி மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு செலுத்துவதாயின் வருட வரிப்பணத்தில் நூற்றிற்கு பத்து வீதம் (10%) கழிவும், உரிய அட்டவணையில் முன்னிலையில் மூன்றாவது நிரலில் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன் உரிய வரிப்பணத் தொகையினை அலவ்வ பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்துவதாயின் ஒரு காலாண்டிற்கு உரிய தொகையில் 5% கழிவினை அலவ்வ பிரதேச சபை வழங்கப்பட வேண்டும் என்று நான் தீர்மானம் விடுக்கின்றேன்.*

**அட்டவணை**

| *காலாண்டு* | *செலுத்த வேண்டிய திகதி* | *5% கழிவுக்காக உரிமை பெறும் கடைசி திகதி* |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | 2025.03.31 | 2025.01.31 |
| இரண்டாவது காலாண்டு | 2025.06.30 | 2025.04.30 |
| மூன்றாவது காலாண்டு | 2025.09.30 | 2025.07.31 |
| நான்காவது காலாண்டு | 2025.12.31 | 2025.10.31 |

*08- 21/2*

## அலவ்வ பிரதேச சபை

வாகனம் மற்றும் மிருகங்களுக்கான வரி விதித்தல் - 2025

அலவ்வ பிரதேச சபையில் அதிகாரம் நடைமுறைப்படுத்துகின்ற, செயல்கள், கடமைகளை நிறைவேற்றுகின்ற, அலவ்வ பிரதேச சபையின் செயலாளர் எம். பி. சீ. ரேணுகா ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9.3 பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 148 பிரிவின் விதிகளுக்கமைய அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2025 ஆம் ஆண்டிற்கு மதிப்பீட்டு வரி விதிப்பதற்கு உரிய சட்டம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும் என்று 2024.06.05 ஆந் திகதி 3325 ஆம் தீர்மான இலக்கத்தின் கீழ் நான் தீர்மானிக்கின்றேன்.

அதன்படி, அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் வரிக்கு உட்படுகின்ற ஏதாவதொரு வாகனம் அல்லது மிருகங்களை வைத்திருக்கும் எல்லோரினாலும், உரிய வாகனத்தை அல்லது மிருகத்தினை தமது பொறுப்பில் வைத்திருக்கும் திகதி தொடக்கம் 30 நாட்கள் பூர்த்தியடைந்தவுடன் 2025 ஆண்டிற்காக இந்த வரி அலவ்வ பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

எம். பி. சீ. ரேணுகா,
செயலாளர்,
அலவ்வ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அலவ்வ,
2024, யூலை 01.

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 147 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்த சட்டத்தின் 148 ஆம் பிரிவும் நான்காம் அட்டவணையில் சட்டதிட்டங்களில் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் 2025 ஆண்டில் கீழ்க் காணப்படும் அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு வாகனம் அல்லது மிருகம் தன்னிடத்தில் வைத்திருக்கும் எல்லோரும் இந்த II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ளவாறு வரி 2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிடுவதற்கு நான் தீர்மானம் விடுக்கின்றேன்.

### அட்டவணை

| | | நிரல் I | நிரல் II<br>ரூபா |
|---|---|---|---|
| 1. | (i) | மோட்டார் வாகனம், மோட்டார் ரைசிகிள், மோட்டார் லொரி, மோட்டார் சைக்கிள், மாட்டு வண்டி, ஜின் ரிக்ஷோ, மிதி வண்டி, அல்லது ரைசிகள் அல்லாத எல்லா வாகனத்திற்காகவும் | 25 0 |
| | (ii) | எல்லா சைக்கிள்கள் அல்லது ரைசிகள்கள் அல்லது சைக்கிள் கார் அல்லது சில்லு வண்டிக்காக | |
| | | (அ) வியாபார அலுவலுக்காக உபயோகிப்பதாயின் | 18 0 |
| | | (ஆ) வியாபார அலுவலுக்கல்லாது உபயோகிப்பதாயின் | 4 0 |
| | (iii) | ஒவ்வொரு வண்டிகளுக்காகவும் | 20 0 |
| | (iv) | ஒவ்வொரு தள்ளு வண்டிகளுக்காகவும் | 10 0 |
| | (v) | ஒவ்வொரு ரிக்ஷோவுக்காகவும் | 7.50 |
| | (vi) | ஒவ்வொரு குதிரைகள், போனியோ அல்லது செம்மறி ஆடுகளுக்காக | 15 0 |
| | (vii) | ஒவ்வொரு யானைகளுக்கும் | 50 0 |

விட்டம் 26 அங்குலத்திற்கு குறைந்த சில்லு உள்ள சிறுவர் வாகனம், வீல் பரோ, இன்னும் தனிப்பட்ட இடங்களில் மாத்திரம் வியாபாரத்திற்காக மாத்திரம் உபயோகிக்கும் கை வண்டி மற்றும் வியாபார அலுவலுக்காக உபயோகிக்கப்படாத கை வண்டி ஆகியன மேற்கூறப்பட்ட கட்டணத்திலிருந்து விடுவிக்கப்படும்.

08-21/ 3

**அலவ்வ பிரதேச சபை**

வாகனங்களை தரித்து வைப்பதற்காக கட்டணம் அறவிடல் - 2025

*அலவ்வ பிரதேச சபையில் அதிகாரம் நடைமுறைப்படுத்துகின்ற, செயல்கள், கடமைகளை நிறைவேற்றுகின்ற, அலவ்வ பிரதேச சபையின் செயலாளர் எம். பி. சீ. ரேணுகா ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9.3 பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 122 பிரிவின் விதிகளுக்கமைய அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2025 ஆம் ஆண்டிற்கு உரித்தாக வாகனம் நிறுத்தி வைப்பதற்காக கட்டணம் விதிப்பதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும் என்று 2024.06.05 ஆந் திகதி 3326 ஆம் தீர்மான இலக்கத்தின் கீழ் நான் தீர்மானிக்கின்றேன்.*

*2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட வாகனம் நிறுத்தி வைப்பதற்கான செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான கட்டணம் 2025 ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

எம். பி. சீ. ரேணுகா,
செயலாளர்,
அலவ்வ பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,
அலவ்வ,
2024, யூலை 01.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தில் 122 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 126 ஆம் பிரிவினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி 2010.07.16 ஆந் திகதி 1663 ஆம் இலக்க வர்த்தமானியில், வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய கௌரவ அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டு அறிவித்தல் விடுக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட துணை விதியினை அலவ்வ பிரதேச சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 2011.07.22 ஆம் திகதி 1716 ஆம் இலக்க வர்த்தமானியில் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அத்துணை விதியின் படி பிரதேச சபை எல்லையினுள் வாகனம் தரித்தல் சம்பந்தமாக கீழ்க் காணப்படும் உப அட்டவணையில் உள்ள கட்டணம் 2025 ஆம் ஆண்டிற்காக அறவிடுவதற்கும், உரிய கட்டணம் செலுத்த வேண்டியவரினால் 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் அலவ்வ பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கின்றது.*

**அட்டவணை**

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | வாகனம் பதிவு செய்யும் கட்டணம் | 100.00 |
| 2. | கார், வேன், முச்சக்கர வண்டிக்காக மாதாந்தக் கட்டணம் | 100.00 |
| 3. | கனரக வாகனத்திற்காக மாதாந்தம் | 125.00 |
| 4. | ரெக்டர், கை ரெக்டர் ஆகியவற்றிற்காக மாதாந்தக் கட்டணம். | 75.00 |

*08-21/4*

---

**அலவ்வ பிரதேச சபை**

காணி விற்பனைக்காக வரி அறவிடல் - 2025

*அலவ்வ பிரதேச சபையில் அதிகாரம் நடைமுறைப்படுத்துகின்ற, செயல்கள், கடமைகளை நிறைவேற்றுகின்ற, அலவ்வ பிரதேச சபையின் செயலாளர் எம். பி. சீ. ரேணுகா ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9.3 பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 154(3) பிரிவின் விதிகளுக்கமைய அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2025 ஆம்*

ஆண்டிற்கு உரித்தாக காணி விற்பனைக்காக வரி விதிப்பதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும் என்று 2024.06.05 ஆந் திகதி 3327 ஆம் தீர்மான இலக்கத்தின் கீழ் நான் தீர்மானிக்கின்றேன்.

2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட வரி மற்றும் கட்டணம் காணி ஏலம் விடுகின்ற ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது அவரது முகவர் ஒருவரினால் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

எம். பி. சீ. ரேணுகா,
செயலாளர்,
அலவ்வ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அலவ்வ,
2024, யூலை 01.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் படி அலவ்வ பிரதேச சபையின் எல்லையினுள் அமைந்துள்ள ஏதாவதொரு காணி ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது உதவி முகவர் ஒருவரினால் பிரசித்த ஏலத்தில் அல்லது ஏதாவதொரு வகையில் விற்பனை செய்கின்ற சந்தர்ப்பத்தில் அக் காணி விற்பனையினால் பெற்ற தொகையில் நூற்றிற்கு ஒரு (1%) வீதத்தில் சமமான வரியும், இலக்கம் 1882/22 மற்றும் 2014.10.01 ஆந் திகதியுடைய காணி துண்டு இடப்படும் ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதியில் 15 இல் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டம் அல்லது உப பிரிப்பை அனுமதித்துக் கொள்வதற்காக பரிசீலனைக் கட்டணமாக கீழ் காணப்படும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் 2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிட வேண்டும் என்றும், அதன் வரியும் கட்டணமும் ஒப்பந்த விற்பனையாளருக்கு அல்லது ஏலதாரருக்கு தரகருக்கு அல்லது அவரின் சேவையாளருக்கு அல்லது அவரின் உதவி முகவரினால் அலவ்வ பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் என்றும் அலவ்வ பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என்று பிரேரணை விடுக்கின்றேன். (எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி அதிகார பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் காணி துண்டிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் போது நகர அபிவிருத்தி வீடு அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்ட 2235/54 2021.07.08 ஆந் திகதிய இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டம் மற்றும் அபிவிருத்தி கட்டளை /விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் அறவிடப்பட வேண்டும்)

**அட்டவணை**

| காணியின் அளவு | அபிவிருத்தி திட்டம் அனுமதிப் பதற்கான கட்டணம் | உபபிரிவை அனுமதிப் பதற்கான கட்டணம் |
|---|---|---|
| ஹெக்டயார் 01 க்கு குறைந்த | ரூ. 500.00 | ரூ. 500.00 |
| ஹெக்டயார் 01 க்கு மேற்பட்ட 02 வரை | ரூ. 700.00 | ரூ. 700.00 |
| ஹெக்டயார் 02 க்கு மேற்பட்ட 04 வரை | ரூ. 1000.00 | ரூ. 1000.00 |
| ஹெக்டயார் 04 க்கு மேற்பட்ட | ரூ. 1250.00 | ரூ. 1250.00 |

08-21/5

---

**அலவ்வ பிரதேச சபை**

விளம்பர அறிவித்தல்/கண்கூடான சுற்றாடல் பற்றிய
துணை விதிகளுக்கு ஏற்ப கட்டணம் அறவிடல் - 2025

அலவ்வ பிரதேச சபையில் அதிகாரம் நடைமுறைப்படுத்துகின்ற, செயல்கள், கடமைகளை நிறைவேற்றுகின்ற, அலவ்வ பிரதேச சபையின் செயலாளர் எம். பி. சீ. ரேணுகா ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9.3 பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 122 பிரிவின் விதிகளுக்கமைய அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2025

ஆம் ஆண்டிற்கு உரித்தாக விளம்பர அறிவித்தல் /கண்கூடான சுற்றாடல் பற்றிய துணை விதிக்கு ஏற்ப கட்டணம் விதிப்பதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும் என்று 2024.06.05 ஆந் திகதி 3328 ஆம் தீர்மான இலக்கத்தின் கீழ் நான் தீர்மானிக்கின்றேன்.

2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட கட்டணம் , விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்கு கருதுகின்ற திகதிக்கு பின்னுள்ள ஏழு நாட்களுக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

எம். பி. சீ. ரேணுகா,
செயலாளர்,
அலவ்வ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அலவ்வ,
2024, யூலை 01.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 (அ) ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி 1988.08.23 ஆந் திகதி இலக்கம் 520/7 க்கான அதி விஷேட வர்த்தமானி மூலம் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனம் (ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி, வீடமைப்பு கௌரவ அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டு அறிவித்தலுக்குற்படுத்தப்பட்டடு ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதி அலவ்வ பிரதேச சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1998.08.28 ஆந் திகதி இலக்கம் 1043 ஆம் இலக்க வர்த்தமானியின் IV(ஆ) பகுதியில் அறிவித்தல் விடுக்கப்பட்ட அந்த துணை விதியில் 39 ஆம் இடைநிலைச் சட்டமாகிய பிரச்சார அறிவித்தல் /பார்வைக்குட்பட்ட சுற்றாடல் பற்றிய துணை விதிப்படி அலவ்வ பிரதேச சபை எல்லையினுள் ஏதாவதொரு வகையில், பாதைக்கு, கால்வாயிற்கு, குளத்திற்கு அல்லது வானத்திற்கு தெரியும் வண்ணம் அறிவித்தலை காட்சிக்கு வைப்பதற்காக கீழ்க் காணப்படும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் 2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிடுவதற்கு வேண்டியவர்கள் அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கு கருதுகின்ற தினத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்பதாக அலவ்வ பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் என்றும் அலவ்வ பிரதேச சபை தீர்மானிக்கின்றது. (எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி அதிகார பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் விளம்பர அறிவித்தலுக்காக அங்கீகாரம் வழங்கும் போது நகர அபிவிருத்தி மற்றும் வீடு அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்ட 2235/54 ஆம் இலக்க 2021.07.08 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டம் மற்றும் அபிவிருத்தி கட்டளை /விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் அறவிடப்பட வேண்டும்.)

**அட்டவணை**

| | விளம்பர அறிவித்தல் விபரம் | அனுமதிப்பத்திர கட்டணம் |
|---|---|---|
| 01. | வியாபார விளம்பர அறிவித்தல், விளம்பர பலகை காட்சிக்கு வைப்பதற்காக ஏதாவதொரு இடத்தில் பொருத்தும் போது ஒரு சதுர அடியிற்கு ஒரு வருடத்திற்கு | ரூ. 150.00 |
| 02. | எவர் ஒருவரினால் தூக்கிச் செல்கின்ற அல்லது பயணம் செய்கின்ற வாகனத்திற்கு பொருத்தப்பட்டுள்ள அல்லது பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அல்லது எவர் ஒருவரினால் பொருத்தப்படுகின்ற பிரசார அறிவித்தல் அல்லது பதாகைக்காக ஒரு சதுர அடியிற்கு - மாதத்திற்கு | ரூ.50.00 |
| 03. | ஏலவிற்பனை காணி பற்றிய விளம்பர அறிவித்தலுக்காக ஒரு சதுர அடியிற்கு - ஒரு மாதத்திற்கு | ரூ. 100.00 |

08-21/6

## அலவ்வ பிரதேச சபை

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சுற்று சூழல் சட்டத்தின் கீழ் உரிமப் பத்திரக் விதித்தல் கட்டணம் - 2025*

*அலவ்வ பிரதேச சபையில் அதிகாரம் நடைமுறைப்படுத்துகின்ற, செயல்கள், கடமைகளை நிறைவேற்றுகின்ற, அலவ்வ பிரதேச சபையின் செயலாளர் எம். பி. சீ. ரேணுகா ஆகிய நான் 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்காக வடமேல் மாகாண சுற்றாடல் சாசனத்தின் கீழ் பிரதேச சபையின் அதிகாரப்படி அலவ்வ பிரதேச சபை பிரதேசத்திற்காக 2025 ஆம் ஆண்டிற்கு உரிய சுற்றாடல் உரிமப்பத்திரக் கட்டணம் விதிப்பதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும் என்று 2024.06.05 ஆந் திகதி 3329 ஆம் தீர்மான இலக்கத்தின் கீழ் நான் தீர்மானிக்கின்றேன்.*

*2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட உரிமப்பத்திரக் கட்டணம் மற்றும் பரிசீலனைக் கட்டணம் சுற்றாடல் உரிமப்பத்திரம் வழங்குவதற்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*எம். பி. சீ. ரேணுகா,*
*செயலாளர்,*
*அலவ்வ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*அலவ்வ,*
*2024, யூலை 01.*

### தீர்மானம்

*வடமேல் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சுற்றாடல் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் செய்யப்படுகின்ற ஏதாவதொரு வியாபாரத்திற்காக கீழ்க் காணப்படும் உப அட்டவணையில் உள்ளவாறு கட்டணமும் மற்றும் பரிசீலனைக் கட்டணம் 2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிடுவதாகவும், உரிய கட்டணம் உரிமப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு முன் அலவ்வ பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் என்று நான் பிரேரணை விடுக்கின்றேன்.*

### அட்டவணை

| | | |
|---|---|---|
| 01. | உரியவாறு அமைக்கப்பட்ட கேள்வி கோரலுக்கான விண்ணப்பப்படிவ கட்டணம் | ரூ. 100.00 |
| | அதிகாரப் பத்திரம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவ கட்டணம் | ரூ. 50.00 |
| | விண்ணப்பப்படிவ கட்டணம் | ரூ.1250.00 |

02. சுற்று சூழல் அதிகாரப்பத்திர பரிசீலனை கட்டணம்

| ஆரம்ப முதலீடு | ரூ. ச. |
|---|---|
| ரூ. 1,00,000.00 வரை | 250.00 |
| ரூ. 1,00,001.00 - ரூ. 2,00,000.00 வரை | 500.00 |
| ரூ. 2,00,001.00 - ரூ. 5,00,000.00 வரை | 1250.00 |
| ரூ. 5,00,001.00 - ரூ. 1,000,000.00 வரை | 2500.00 |
| ரூ. 1,000,001.00 மேல் | 5000.00 |

*08-21/7*

**அலவ்வ பிரதேச சபை**

சான்றிதழ், பெற்றுக் கொடுக்கப்படுகின்ற சேவைகளுக்காக கட்டணம் விதித்தல் - 2025

அலவ்வ பிரதேச சபையில் அதிகாரம் நடைமுறைப்படுத்துகின்ற, செயல்கள், கடமைகளை நிறைவேற்றுகின்ற, அலவ்வ பிரதேச சபையின் செயலாளர் எம். பி. சீ. ரேணுகா ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் பிரதேச சபை சட்டத்தின் 9.3 பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய பிரதேச சபைச் சட்டத்தினால் பிரதேச சபைக்கு அளிக்கப்படட்டுள்ள அதிகாரப்படி 2025 ஆம் ஆண்டிற்கு உரித்தாக வழங்கப்படுகின்ற சான்றிதழ் வழங்கப்படும் சேவைகளுக்காக கட்டணம் விதிப்பதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும் என்று 2024.06.05 ஆந் திகதி 3330 ஆம் தீர்மான இலக்கத்தின் கீழ் நான் தீர்மானிக்கின்றேன். அதாவது

2025 ஆம் ஆண்டு சபையினால் வழங்கப்படுகின்ற சான்றிதழ் மற்றும் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக விதிக்கப்பட்ட உரிய கட்டணம் அச் சேவைகள் அல்லது சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமென்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

எம். பி. சீ. ரேணுகா,
செயலாளர்,
அலவ்வ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அலவ்வ,
2024, யூலை 01.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் கீழ்க் காணப்படும் உப அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ் அல்லது சேவைகள் பெற்றுக் கொடுப்பதற்காக அந்த உப அட்டவணையில் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் 2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும் என்று, உரிய வேலையை அல்லது சான்றிதழை பெற்றுக் கொள்ளும் எவர் ஒருவரினால் அந்த சேவையை அல்லது சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு முன் அக் கட்டணத்தினை அலவ்வ பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டும் என்றும் நான் பிரேரணை விடுக்கின்றேன். (எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி அதிகாரபிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் கட்டிட திட்டத்தை அங்கீகரிக்கும் போது வழங்கப்படுகின்ற சான்றிதழ் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடு அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்ட 2235/54 ஆம் இலக்க 2021.07.08 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டம் மற்றும் அபிவிருத்தி கட்டளை / விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் அறவிடப்பட வேண்டும்.)

**அட்டவணை**

| இல. | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| 1. | வீதி ரேகா மற்றும் மீள் பெறாத சான்றிதழ், கட்டிடங்கள் மட்டுப்படுத்தப்பட்ட உரிமையுள்ள சான்றிதழுக்காக | ரூ.600.00 |
| | அதற்கான வைப்புத் தொகை | ரூ.100.00 |
| 2 | சொத்து உரிமையை மாற்றுதல், வரிப்பணம் அட்டவணையில் பெயரை மாற்றுதல் | ரூ.500.00 |
| 3. | கட்டிடம் முறையானது பற்றிய சான்றிதழ் | ரூ.1000.00 |
| 4. | கட்டிட விண்ணப்பப்படிவங்களின் உரிய காலத்தை நீடிப்பதற்கு ஒரு வருடத்திற்காக | ரூ.1000.00 |
| 5. | கட்டிட விண்ணப்பத்திற்காக | ரூ.500.00 |

6. கட்டிட விண்ணப்பத்தை அனுமதிக்கும் போது
கட்டணம் (முன்கூட்டிய கட்டணம்) கட்டிடத்தின் அளவு

| கட்டத்தின் அளவு (சதுர அடி) | சதுர அடிக்கான கட்டணம் ரூ.ச. | |
|---|---|---|
| | குடியிருப்பு | வியாபார |
| 500 இற்கு குறைந்த | 1.00 | 1.50 |
| 500 - 1000 | 1.50 | 2.00 |
| 1001 - 2000 | 2.00 | 2.50 |
| 2001 - 3000 | 2.50 | 3.00 |
| 3001 - 5000 | 3.00 | 3.50 |
| 5001 - 10000 | 3.50 | 4.00 |
| 10000 இற்கு மேற்பட்ட | 5.00 | 6.00 |
| 5 அடி உயரத்திற்கு குறைந்த மதிலுக்கு ( 1 அடி நீளத்திற்காக) | 10.00 | 10.00 |
| 5 அடி உயரத்திற்கு மேற்பட்ட மதிலுக்கு ( 1 அடி நீளத்திற்காக) | 15.00 | 15.00 |
| மதில் ஒன்றினை கட்டமைப்பதற்கு ( 1 அடி நீளத்திற்காக) | 10.00 | 10.00 |

7. சட்டரீதியாகக் கூடிய அனுமதியற்ற கட்டமைப்புக்கள் சட்டரீதியாக்குவதற்கான கட்டணம்
(மேலே குறிப்பிடப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக அறவிடப்படும் கட்டணம்)

| | சதுர அடியிற்கான கட்டணம் ரூ.ச. | |
|---|---|---|
| | குடியிருப்பு | வியாபார |
| (மேலே குறிப்பிடப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக அறவிடப்படும் கட்டணம்) | | |
| (அ) அத்திவாரத்தின் கடைசி வரை கட்டமைக்கப்பட்டிருந்த போது | 10.00 | 20.00 |
| (ஆ) கட்டமைப்பு ஒரு பகுதி முடிவடைந்திருந்த போது | 15.00 | 30.50 |
| (இ) கட்டமைப்பு முடிவடைந்திருந்த போது | 20.00 | 40.00 |

8. தொலைபேசிக் கம்பம்/என்டனா கம்பம் கட்டமைத்தல் உயரம் 5 மீற்றர் -20 மீற்றர் வரை ரூ. 20,000.00 மற்றும் அதிகரிக்கும் அனைத்து ஒவ்வொரு மீற்றருக்கும் ரூ. 100.00 படி — ரூ.1000.00

9. காணியினை துண்டிடுவதற்கான விண்ணப்பப்படிவம் — ரூ.1000.00

10. உண்டியல் படுத்தப்படாத காசோலைக்கான கட்டணம் — ரூ.100.00

11. திட்டப் பத்திரத்தை அனுமதிப்பதற்கான கட்டணம் — ரூ.750.00

12. வரிப்பணம் அட்டவணையில் பிரதியை பெற்றுக் கொள்ளல், சொத்திற்கு பெறுமதி ஆவணத்துக்காக — ரூ.500.00

13. வரிப்பணம் செலுத்துவதில்லை என்று சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்காக — ரூ.200.00

14. காணாமற்போன சான்றிதழ்களின் பிரதியிற்காக — ரூ.250.00

15. ஆபத்துடைய மரம் ஒன்றினை அகற்றுவற்கான விண்ணப்பப்படிவம் ஒன்றிற்காக — ரூ.500.00
ஆபத்துடைய மரஸ்களதுபரீசீலணைக் கட்டணம் — ரூ. 500.00

16. நீர் பவுசர்களை வாடகைக்கு வழங்குவதற்கான கட்டணம்

| | | |
|---|---|---|
| (I) | நிலையான கட்டணம் | ரூ. 2500.00 |
| (II) | அதிகரிக்கும் ஒவ்வொரு பவுசருக்காகவும் | ரூ. 750.00 படி |
| (III) | நீர் கொண்டு சென்று வழங்குவதற்கான வண்ணம் கட்டணம் 1 கிலோ மீற்றருக்கு (சென்று வருவதற்காக) | ரூ. 360.00 |

17. சேதப் பசளை (கொம்போஸ்ட் பசளை) ஒரு கிலோவிற்காக ரூ. 20.00

18. கொடிக் கம்பத்திற்கான கட்டணம்
12 மணி அல்லது 12 மணித்தியாலத்திற்கு குறைந்த காலத்திற்காக ரூ.50.00
12 மணிக்கு மேற்பட்ட 24 மணித்தியாலத்திற்கு குறைந்த காலத்திற்காக ரூ.80.00
ஒரு கொடிக் கம்பத்திற்காக வைப்புத் தொகை ரூ.200.00

19. சமஹட் வாடகைக்கு வழங்குவதற்கான கட்டணம்

| கூறு | வைப்புத் தொகை | அதிகாரப்பிரினுள் | | அதிகாரப்பிரிவின் வெளியே | |
|---|---|---|---|---|---|
| | | ஒரு தினத்திற்கு | அதிகரிக்கின்ற நாட்களுக்காக | ஒரு தினத்திற்கு | அதிகரிக்கின்ற நாட்களுக்காக |
| ஒரு சமஹட்டிற்காக | 5000.00 | 1000.00 | 800.00 | 1200.00 | 1000.00 |
| போக்குவரத்து கட்டணம் 1 கி.மீ. | | 360.00 | | 360.00 | |

20. சபைக்குரிய அலவ்வ பேரூந்து தரிப்பிடத்திற்கு உள்பிரவேசிக்கின்ற எல்லா பொது வாகன பேரூந்துகளினால் ஒரு தினத்திற்கு ஒரு தடவை மாத்திரம் அறவிடப்படும் கட்டணம் ரூ. 50.00

21. குளாய்களை இடுவதற்காக பாதையினை பழுதுபடுத்துவதற்கான கட்டணம்
தார் இடப்பட்ட பாதை (சதுர அடியிற்காக) ரூ.500.00
கொன்கிறீட் இடப்பட்ட பாதை (சதுர அடியிற்காக) ரூ.400.00
கெரவல் இடப்பட்ட பாதை (சதுர அடியிற்காக) ரூ.100.00
கெரவல் இடப்பட்ட பாதையில் பக்க வெட்டை வெட்டுவதற்காக (சதுர அடியிற்காக) ரூ.100.00

22. கழிவு அகற்றும் பௌசரிற்காக (மலசல கழிவுகள்) அறவிடப்படும் கட்டணம்
பரிசீலனைக் கட்டணம் ரூ.1000.00
நிலையான கட்டணம் (முதலாவது லோடிற்காக) ரூ.4000.00
அதிகரிக்கின்ற எல்லா லோட் ஒன்றிற்காகவும் ரூ.2100.00
சாரதி மற்றும் உதவியாளர் கொடுப்பனவு ரூ.1000.00
போக்குவரத்து கட்டணம் கி.மீ. 1 இற்காக (சென்று வருவதற்கு) ரூ.600.00

23. வாசிகசாலைகளுக்காக அறவிடப்படும் கட்டணம்
வாசிகசாலை உறுப்புரிமைக்கான விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூ.25.00
வாசிகசாலை உறுப்புரிமைக் கட்டணம்
சிறுவர்களுக்காக ரூ.25.00
வயதுவந்தவர்களுக்காக ரூ.100.00
வாசிகசாலை உறுப்புரிமையை ஆண்டு தோறும் புதுப்பிப்பதற்கான கட்டணம் :
சிறுவர்களுக்காக ரூ.25.00
வயதுவந்தவர்களுக்காக ரூ.50.00

24. தாமதத்திற்கான தண்டனை கட்டணம் அறவிடல்

01. முதல் 30 ஒரு நாளுக்கு ஒரு புத்தகத்திற்கு ரூ.2.00 வீதம்
02. 31 முதல் 90 வரை ஒரு புத்தகத்துக்கு ரூ. 80.00
03. 91 முதல் 180 வரை ஒரு புத்தகத்துக்கு ரூ. 160.00
04. 180 தினங்களுக்கு மேற்படுகின்ற தினங்களுக்காக ஒரு புத்தகத்திற்கு ரூ. 200.00

| | |
|---|---|
| 25. பிரதேச சபைக்கு உரிய அடக்கஸ்தளங்களில் பூதவுடலினை சமாதி கட்டுவதற்கான கட்டணம் - 1 சதுர அடிக்காக | ரூ.3000.00 |

08-21/8

---

### அலவ்வ பிரதேச சபை

பிரசித்த நாடக கலை கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படுகின்ற கட்டணம் - 2025

அலவ்வ பிரதேச சபையில் அதிகாரம் நடைமுறைப்படுத்துகின்ற, செயல்கள், கடமைகளை நிறைவேற்றுகின்ற, அலவ்வ பிரதேச சபையின் செயலாளர் எம். பி. சீ. ரேணுகா ஆகிய நான் (176 ஆம் அதிகாரம்) பிரசித்த நாடக கலை கட்டளைச் சட்டத்தின் (31) ஆம் பிரிவினால் பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ளஅதிகாரப்படி அலவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் காட்சி உரிமப்பத்திரக் கட்டணம் விதிப்பதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும் என்று 2024.06.05 ஆந் திகதி 3331 ஆம் தீர்மான இலக்கத்தின் கீழ் நான் தீர்மானிக்கின்றேன்.

2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட அக் காட்சி உரிமப்பத்திரக் கட்டணம், காட்சிப்படுத்துவதற்கு மூன்று நாட்களுக்கு முன் அலவ்வ பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

எம். பி. சீ. ரேணுகா,
செயலாளர்,
அலவ்வ பிரதேச சபை.

